RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt21214

# ஆறு. அழகப்பனின் திருவள்ளுவர் நாடகத்தில் ஐவகை நாடகக் கலைகள்

க. இரமேஷ் [அ, *]

[அ] தமிழ்த்துறை, சமூக அறிவியல் மற்றும் மனிதநேய பள்ளி, தமிழ்நாட்டு மத்தியப் பல்கலைக்கழகம், நீலக்குடி வளாகம், திருவாரூர்-610005, இந்தியா

# Five types of dramatic arts in R. Alagappan's Thiruvalluvar play

G. Ramesh [a, *]

[a] Department of Tamil, Central University of Tamil Nadu, School of Social Science and Humanities, Neelakudi, Thiruvarur-610 005, India

* Corresponding Author: rameshg@cutn.ac.in

Received : 03-02-2021
Revised : 12-04-2021
Accepted : 20-04-2021
Published : 30-04-2021

**ABSTRACT**

Tirukkural is an prominent and incomparable work in Tamil literature. Through Thirukkural Tamil language reached a specific place in world. Thirukkural is unique among the literary works he accomplished. At a time when religious principles were being inculcated as the highest virtues in the Tamil society, the book that strengthened the social justice concepts is Thirukkural. Thirukkural was a book that rose to global prominence in a time when some books were only reserved for a certain class people. Periyar, who voiced out for social justice till his death such as rejection of caste and religion, said that Thirukkural is a rejection of Manu Dharma. Today one who talks about social justice cannot avoid Thirukkural. To that extent, Thirukkural remains as a public virtue that people admire. Now a days everyone distorts and changes the history of Valluvar according to their own interests. Many people have made an effort to make it for themselves. However, Thirukkural stand on its own merits. Alagappan's Thiruvalluvar play explains the rift between Thiruvalluvar and human morality. This essay is to explore and express his plays in the theoretical approach of dramaturgy.

**Keywords:** Thirukkural, Alagappan, Tamil society, Caste

## முன்னுரை

திருவள்ளுவர் நாடகத்தை எழுதியவர் ஆறு அழகப்பன் ஆவார். இவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றும்போது இந்நாடகத்தை இயற்றினார். இந்நாடகத்தின் முதல் பதிப்பு ஜனவரி 1969 ஆம் ஆண்டு வெளிவந்தது. இவர் நாடக செல்வன், எள்ளல் நாடகங்கள் (இரண்டு தொகுதிகள்) மேடை நாடகங்கள் போன்ற பல்வேறு நாடகப் பிரதிகளை இயற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரியற்றிய திருவள்ளுவர் என்கிற நாடகத்தில் இடம்பெறும் ஐவகை நாடக அங்கங்களை இனங்கண்டுரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

## திருவள்ளுவர் நாடகம்

திருவள்ளுவரையும் திருக்குறளையும் மையமாக வைத்து இன்றளவும் நூற்றுக்கணக்கான நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. “வள்ளுவர் வரலாறு என்றவுடன் வாசுகியுடன் அவர் வாழ்ந்தபொழுது எழுந்த பல அற்புதங்களும் புலவர்களின் காழ்ப்புக்கு அவர் ஆளானதும் அனைவருக்கும் நினைவு வரும். வாசகர்களை இந்நாடகத்தில் அந்த மயக்கத்திலிருந்து நீக்கியிருக்கிறேன்” (Azhagappan, 1994) என்று இந்நாடகம் குறித்து ஆறு அழகப்பன் கூறியிருக்கிறார்.

மேலும், இந்நாடக நூல் குறித்து "உலக பெரியோர்களுக்கு ஏற்பட்டத் துன்பியல் முடிவினைப்போல வள்ளுவருக்கும் ஏற்பட்டது என்பது முழு கற்பனை அன்று. அபிதான சிந்தாமணி, புலவர் புராணம் முதலிய நூல்களில் திருவள்ளுவர் மாணவர்களால் அடித்துக் கொல்லப்பட்டார் என்று காணப்பட்ட குறிப்பின் அடிப்படையில் எழுதப்பட்டதாகும்" (ஆறு அழகப்பன்.1969) என்று இக்குறுநாடகம் எழுதப்பட்டப் பின்னணியைப் பதிவு செய்கிறார். இந்நிகழ்வுகளை உறுதிசெய்வதே இந்நாடகத்தின் நோக்கமாகும். நாடகப் பிரதி படைப்பது என்பது எல்லோராலும் இயலாது. "சமூகப் பொறுப்பை உணர்ந்தவர்களே சிறந்த இலக்கியப் படைப்பாளராக உருவாக முடியும். அதிலும் நாடகப் படைப்பாளராகத் திகழ மிகத் திண்ணிய சமூகச் சிந்தனையோடு மனித மேம்பாட்டு ஆர்வமோடு இணைந்திருக்க வேண்டும்" (Elango, 2017) என்பதை உணர்ந்து காலத்தால் அழியாத இந்நாடகப் பிரதியை ஆறு அழகப்பன் படைத்துள்ளார்.

## நாடகத்தின் முக்கோண நிலை

ஒரு நாடகத்தின் அமைப்பு மூன்று முக்கோண நிலைகளில் அமையும். அரிஸ்டாட்டில் நாடகவியலைக் குறித்து எழுதும்போது ஒரு நாடகத்திற்குத் தொடக்கம், மையம், இறுதி என்ற மூன்று நிலைகள் அமையவேண்டும் என்கிறார். பிரெயிடிக் நடிப்பு, உயர்தல், உச்சகட்டம், வீழ்ச்சி என வேறு வகையாக நாடகத்தின் அமைப்பை வகைப்படுத்துகின்றார்.

நாடகம்

- தொடக்கம்
- மையம்
- இறுதி

நாடகத்தில் கதைத்திட்டம் ஐந்து நிலைகளில் அமையும் என்பர். "தொடக்கம், வளர்ச்சி, உச்சநிலை, வீழ்ச்சி, முடிவு என ஐந்து நிலைகளாகக் கதைத்திட்டம் அமைந்திருப்பதால் நாடகம் ஐந்து அங்கமுடையதாகப் பிரிக்கப்பட்டது என்பர்" (Azhagappan, 1994) மேலைநாட்டு நாடகங்களில் காணப்படுகின்ற இக்கதைத் திட்ட வகைமை வடமொழி நாடகங்களிலும் காணப்படுகிறது.

## நாடக கதைத்திட்டத்தின் ஐவகை நிலைகள்

தமிழ் மொழியிலும் வட மொழியிலும் ஐவகை சந்திகள் உள்ளன. உரையாசிரியர் அடியார்க்குநல்லார் ஐவகை சந்திகளுக்கும் மிக விரிவான விளக்கம் தந்துள்ளார். பரிதிமாற் கலைஞரும் ஐவகை சந்திகளை சுட்டிக்காட்டுகின்றார்.

தமிழ் மொழியில் ஐவகை சந்திகள் (அடியார்க்கு நல்லார்)

ஐவகை நிலைகள்

1. முகம்
2. பிரதி முகம்
3. கருப்பம்
4. விளைவு
5. துய்த்தல்

வடமொழியில் ஐவகைச் சந்திகள்

ஐவகை நிலைகள்

1. ஆரம்பம்
2. பிரயத்தனம்
3. பிராத்தியாசம்
4. நியதாத்தி

5. பசாகமம்

அடியார்க்குநல்லார் தனது உரையில் துய்த்தல், விளைவு, கருப்பம், பிரதிமுகம், முகம் என ஐந்து வகையான நிலைகளைக் கூறுகிறார்.

வடமொழியில் ஆரம்பம், பிரயத்தனம், பிராத்தியாசம், நியதாத்தி, பசாகமம் என ஐந்து வகை நிலைகள் உள்ளன.

ஐந்து வகையான நிலைகளும் அனைத்து வகையான நாடகங்களும் இடம்பெற வாய்ப்புள்ளது. படைப்பாளர்கள் இந்த வரையறைகளைக் கொண்டு படைப்பாளர்கள் இந்த ஐந்து நிலைகளும் வரிசைப்படி அமைத்து நாடகம் எழுதுவதில்லை. அது இயல்பாகவே ஒரு நாடகத்தில் இந்த நிலைகள் அமைந்துவிடுகின்றன. அந்த வகையில் திருவள்ளுவர் நாடகத்தில் ஐந்து வகையான கூறுகள் காணப்படுகின்றன.

## திருவள்ளுவர் நாடகம்

திருவள்ளுவரின் வாழ்க்கை வரலாறு குறித்துப் பல்வேறு வகையான கதைகள் தமிழ்க்கூறும் நல்லுலகத்தில் உள்ளன. திருவள்ளுவரின் திருக்குறள் ஒரு பெரும் சமூக மாற்றத்தினை உருவாக்கும் என்று தெரிந்து அவருடன் சென்ற மாணவர்கள் அவரது கருத்தியல் பிடிக்காமல் கொன்றுவிடுகின்றனர். அபிதான சிந்தாமணி, புலவர் புராணத்தில் திருவள்ளுவர் மாணவர்களால் அடித்துக்கொல்லப்பட்டார் என்ற குறிப்பின் அடிப்படையில் திருவள்ளுவரின் வாழ்க்கை வரலாற்றைப் பதிவுசெய்வது இந்நாடகத்தின் நோக்கமாகும்.

புதிய கருத்தியல்கள் சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி மறுமலர்ச்சி உண்டாக்கும். இம்மறுமலர்ச்சியை விரும்பாதவர்கள், அக்கருத்தியலை உருவாக்கியவர்களை அழித்தொழிப்பதற்கு முயற்சி செய்வார்கள். அவ்வாறே இந்நாடகத்தில் பழைமை கொள்கைகளின் வடிவமாக வரும் பழையன் என்பவன் வள்ளுவர் கருத்துக்களுக்குப் பகைமையாக இருந்து வஞ்சத்துடன் தனது அடியாட்களையும் திருவள்ளுவரின் போலி மாணவர்களாக மாற்றுகிறான். பின்பு, வள்ளுவரை அவர்கள் அடித்துக் கொல்கிறார்கள். இதனை, மையச்சரடாக வைத்து நாடக ஆசிரியர் இந்நாடகத்தை இயற்றியுள்ளார்.

## தொடக்கம்

திருவள்ளுவர் மயிலவாழ் மக்களை தனது மாணவர்களின் உதவியால் அங்குள்ள கடற்கரையில் திரட்டுகிறார். அங்கு, ஒவ்வொரு வெள்ளிக்கிழமை மாலையில் சொற்பொழிவு நிகழ்த்துவார். மக்கள் ஆர்வத்தோடு அவர் சொற்பொழிவுகளை ஒவ்வொரு வாரமும் கேட்டு மகிழ்ந்தனர். புலால் உண்ணக்கூடாது, திருடக்கூடாது, கொல்லக்கூடாது, சிற்றினம் சேரக்கூடாது, பொய் பேசக்கூடாது, ஆசையை அறுத்துவிட வேண்டும், பொறாமைப்பட வேண்டும், கோபப்படக்கூடாது எனும் பொருண்மைகளில் உரையாற்றினார். இதனைப் பலரும் வியந்து வியந்து பேசி மகிழ்ந்தாலும் பழைமைவாதியான பழையன் இதனைப் பெருங்கோபத்துடன் எதிர்த்தான். வள்ளுவரை அழிக்க இந்நிகழ்வே தொடக்கமாக அமைகிறது. “(உரும்புகிறான்) ஏ! வள்ளுவா! தமிழ்ப்புலவா! கிழவா! இப்படி எல்லாம் வம்பு பேசி எங்கள் வாழ்வில் மண்ணைத் தூவ வந்த புரட்சிகாரா! நான் யார் தெரியுமா”[5] என்று பழையன் வள்ளுவரைக் கொலை செய்ய வேண்டும் என்ற திட்டத்தின் தொடக்கமாக அவரைத் தாக்குவதற்குத் திட்டமிடுகிறான். வள்ளுவர் மாது, மது, சூது இவற்றின் தீமைகளை மக்களுக்குக் கூறி வருகிறார். வள்ளுவரின் சொற்பொழிவைக் கேட்க இலங்கையிலிருந்து ஏலேலே சிங்கர் வள்ளுவரின் புகழினை மக்களிடையே பரப்புகிறார். மக்கள் வள்ளுவரைப் போற்றி வணங்குகின்றனர். இவையெல்லாம் வள்ளுவர் திருக்குறள் இயற்றுவதற்குத் தொடக்கமாக அமைந்த நிகழ்வுகள் ஆகும். அதுபோலவே இதற்கு எதிர்நிலைக் கருத்துகள் கொண்ட பழையன் வள்ளுவரை கொல்ல வேண்டும். இக்காட்சியில் பழையன் வள்ளுவரைத் தாக்கியதும் கதை அடுத்தடுத்த காட்சிகளுக்கான

இடம்கொடுக்கிறது. கதையின் வளர்ச்சிநிலை இங்கிருந்துதான் தொடங்குகிறது. ஏனெனில், பழையனால் தாக்கப்பட்ட வள்ளுவர் ஓய்வுநிலையில் உள்ளார். அவரைப் பார்க்க வந்த ஏலேலே சிங்கர் கணியன் பூங்குன்றன் பாடிய பாடலைக் கேட்கின்றார். இந்நிகழ்விலிருந்து தான் திருக்குறள் எழுதுவதற்கான சூழல் உருவாகிறது.

“ஏலேலே சிங்கரே! உண்மைதான். இது நாள் வரை பேச்சு வடிவில் நின்ற நமது கருத்துக்கள் ஏட்டிலும் இடம்பெற வேண்டும். உடனடியாக நாளை எழுத்தாணிக்கும் ஓலை நறுக்குகளுக்கும் ஏற்பாடு செய்யுங்கள்” (Azhagappan, 1994) என்று திருக்குறள் எழுத ஆரம்பிக்கின்றார். இதுவே கதை நிகழ்வின் வளர்ச்சிக்கு அடித்தளமிடுகிறது. திருக்குறள் இயற்றப்பட்டதை அறிந்த பழையன் அதனை அழிக்கத் திட்டமிடுவதன் மூலம் அடுத்தடுத்து நாடகக் காட்சிகள் அமைக்கக் கதை வளர்ச்சிநிலை அடைகிறது.

## உச்சநிலை

வள்ளுவர் திருக்குறளை எழுத ஆரம்பித்துவிட்டார் என்பதை அறிந்த பழையன் கோபமடைகிறான். நீண்ட கத்தியினைத் தீட்டி பதம் பார்க்கிறான். திருக்குறள் வந்துவிட்டால் எக்காலத்திற்கும் நிலைத்துவிடுமே என்று அதனை அழிக்கத் திட்டமிடுதலிலும் அழித்தலிலுமே இந்நாடகத்தின் உச்சநிலை ஆகும்.

“இன்னும் சில நாட்களில் எழுதி முடித்துவிடுவானா? அதற்குள் அவன் வரலாற்றையே முடித்துக்காட்டுகிறேன்! இந்தப் பழையனை எதிர்த்தவர்கள் யாரும் இதுவரை நிலைத்ததில்லை, நின்றதில்லை. பாறையின்மீது மோதிய முட்டையைப் போலப் பழையன் மீது மோதிய வள்ளுவனும் ஆகப்போகிறான் ஊத்தடா ஒரு கலம் இப்பால்” (Azhagappan, 1994) என்று மதுபோதை ஏற ஏற வள்ளுவனையும் அவனது படைப்பையும் அழிப்பதற்கான திட்டங்களைச் சிந்தித்துத் தனக்குத்தானே வெறியேற்றிக் கொள்கின்றான்.

“ம் வள்ளுவர் விதைத்த விதை முளைக்க ஆரம்பித்துவிட்டது! ஆணிவேர் விடுவதற்குள் ‘கெல்லி’ எறிய வேண்டும். என் இன்பத்தையே ஒழிய சொல்லி வீதியில் கூக்குரல்கள் நம்மையும் நோக்கித் தாக்கும்” (Azhagappan, 1994) என்று பொதுமகளான எழிலியைக் கொண்டு வள்ளுவரின் தனிமனித ஒழுக்கத்தைச் சிதைத்துப் பொதுமக்கள் முன்னிலையில் கலங்கம் உண்டாக்க நினைக்கின்றான். இவ்வாறுதான் காட்சிகள் உச்சநிலை நோக்கி நகருகின்றன. வள்ளுவர் திருக்குறள் என்னும் நூலை எழுதத்தொடங்கி அதன் இறுதி வடிவத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறார். இறுதியாக அந்நூலை முழுவதும் எழுதி முடித்துவிட்டார். அதுவே அவரின் மரணத்திற்குக் காரணமாக அமைகிறது.

“மாணவர்களே! என் உள்ளத்தில் உள்ள கருத்துக்களை வாழ்க்கைநெறி நூலாக எழுத ஆரம்பித்த பணியினை இன்றோடு எழுதி முடித்தும் விட்டேன். இதோ வாழ்க்கைநெறி நூலின் கடைசிக்குறளைக் கேளுங்கள்.

“ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்குஇன்பம்

கூடி முயங்கப் பெறின்”

வள்ளுவர் தனது மாணவர்களிடம் இதோ வாழ்க்கை நூலின் கடைசி குறளைக் கேளுங்கள்” (Azhagappan, 1994) என்று மேற்கண்ட குறளைப் பாடுகின்றார். அதுவே அவரது வாழ்நாளின் கடைசிக் குறளாக அமைந்தது. வள்ளுவரின் திருக்குறள் முடிவடைந்ததை அறிந்த பழையனும் அவனது கூட்டாளிகளும் அவரின் காலில் விழுந்து மன்னிப்பு கேட்கின்றனர். அவரும் மன்னித்து மாணவர்களாக ஏற்றுக்கொள்கிறார்.

பாண்டியநாட்டுத் தலைநகர் கூடலில் புலவர்கள் கூடி ஒண் தீந்தமிழ் ஆராய்வதை ஏலேலே சிங்கர் வள்ளுவருக்குத் தகவல் சொல்கிறார். பாண்டியன் உக்கிரப்பெருவழுதியின் தலைமையில் கூடும் தமிழவையில் திருக்குறள் வாழ்க்கை நெறி நூலினை அரங்கேற்றம் செய்ய வள்ளுவரும்

ஒப்புக்கொள்கின்றார். ஏலேலே சிங்கர் கொடுத்த சந்தனப் பேழையில் திருக்குறளை வைத்து எடுத்துக்கொண்டு மதுரை செல்கின்றனர்.

இரவில் மதுரைக்கு ஒதுக்குப்புறமாக இருந்த இடத்தில் வள்ளுவர் மற்றும் பழையன் உட்பட மாணவர்கள் உறங்கச் செல்கின்றனர். அனைவரும் உறங்கியவுடன் பழையன் மட்டும் நடுநிசியில் சத்தமின்றி எழுந்து சந்தனப்பேழையைத் திறக்கின்றான். தீவட்டியை எடுத்து வந்து பேழையில் உள்ள ஏடுகளுக்குத் தீ மூட்டுகின்றான் அவை சாம்பளாகிவிடுகின்றன. அதை எடுத்துச் சந்தனப் பேழையில் இட்டு யாருக்கும் தெரியாமல் உறங்கச் சென்றுவிடுகின்றான். தமிழர்களின் வாழ்வியல் விழுமியங்களைத் திருக்குறள் வழி கட்டமைத்த வள்ளுவர் கொல்லப்பட வேண்டியவராக உச்சநிலைப் பகுதி நாடகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

## வீழ்ச்சி

பழையன் மற்றவரின் பார்வைக்கு வள்ளுவரின் மாணவனாக நடித்து அவரைக் கொலை செய்தவன். மதுரை கூடல் நகரில் நடைபெற்ற நூல் அரங்கேற்றத்தின்போது சந்தனப்பேழையில் சாம்பலைப் பார்த்து அதிர்கிறார் வள்ளுவர். அவையில் உள்ளோர் ஏளனம் செய்கின்றனர். வள்ளுவர் தலைகுனிகிறார். ஏலேலே சிங்கர் வள்ளுவருக்குத் தெரியாமல் அவரது மாணவர்களை வைத்துப் படி எடுத்திருந்ததை அவரிடம் தருகிறார். அனைவரும் வியந்து பாராட்டுகின்றனர்.

“நமக்கு வாழ்வா? அல்லது சாவா? என்ற மனப்போராட்டம். நாம் ஏன் சாக வேண்டும்? நேற்று முளைத்த இந்தக் காளானைக் கிள்ளி எறிந்துவிட்டால் இம்........ அருகில் வாருங்கள். தூங்கிக் கொண்டிருக்கும் திருவள்ளுவர் இனி எழுந்திருக்கவே கூடாது. மீளாத் தூக்கமாகவே இருக்கட்டும். திருவள்ளுவன் திருக்குறளை வைத்து நம்மை எதிர்த்தான். நாம் நமது ஆயுதத்தை எடுத்துத் திருவள்ளுவனை எதிர்ப்போம்” (Azhagappan, 1994) என்று பழையன் திட்டமிட்டு வள்ளுவனைக் கொடிய ஆயுதங்களால் தாக்குகின்றார். வழி தாளாமல் கதறுகிறார். அவர் சாகும் தருவாயிலும் பழையனின் காலில் உள்ள புண்ணிற்கு மருந்து கொடுத்துவிட்டு “ம்.............. தாயே! அறியாமல் செய்யும் இந்தப் பிள்ளைகளை மன்னித்துவிடு. பிள்ளைகளே! இனி நீங்கள் உங்கள் ஆசையை நிறைவேற்றிக் கொள்ளுங்கள்” (Azhagappan, 1994) என்று கூறிவிட்டு உயிர் துறக்கின்றார். இவ்வாறாக வள்ளுவர் கொல்லப்படுகின்றார். ஏனைய காட்சிகள் முடிவு கட்டத்திற்குப் பாதை அமைக்கிறது.

## முடிவுரை

பழையனின் சதியால் வள்ளுவர் அடித்துக் கொல்லப்பட்டார். அவனும் பிற மூடர்களும் அவரின் இறப்பிற்காக அழுவதுபோல் பாவனை செய்து கொண்டிருந்தனர். அப்பொழுது உக்கிரப்பெருவழுதி தமிழுக்கு யார் இந்தக் கொடுமையை செய்தது என்று வினவினார். அதற்கு பழையன், “தெய்வப்புலவரின் விருப்பப்படியே செய்யப்பட்டது. தனக்கு ஒரு திருவிழா வேண்டுமென்றும் தான் இயற்கையாக இறக்கக்கூடாது என்றும் இவ்வாறே தன்னை வருத்திக் கொல்ல வேண்டும் என்றும் உயிர்போன தன்னுடம்பைப் புதைக்கக்கூடாது என்றும் எங்கள் குருதேவர் கூறினார். எங்களால் அவரது கடைசி ஆசையைத் தட்ட முடியவில்லை. திருவள்ளுவர் தம்முடைய கருத்துக்களில் புதுமையும் புரட்சியும் கண்டதுபோல் தம் இறப்பிலும் கூடப் புதுமையும் புரட்சியையும் கண்டிருக்கிறார்” என்று கூறுகிறான். வள்ளுவர் இருந்தாலும் அவரது கருத்துக்கள் அழிக்கமுடியாதன. திருக்குறளைப் படித்தவர்கள் வாழ்க்கையில் பேறு அடைகின்றனர். வள்ளுவரின் உடம்பைத் தின்ற கழுகுகளும் பருந்துகளும் முக்திப் பேற்றினை அடையும் சிறப்பினைப் பெறும் என்ற ஏலேலே சிங்கர் கூற்று மெய்மைத்தன்மை கொண்டது. திருக்குறள் என்னும் மாபெரும் மெய்மைத்தன்மையான இலக்கியத்தை இயற்றிய வள்ளுவரின் உயிர் பழைமைவாதிகளால் பறிக்கப்படுகிறது. அவர் மறைந்தாலும் அவரது படைப்பு நிலைத்து நிற்கும் என்பதே முடிவாகிறது.

## References

Azhagappan, R. (1994) Thiruvalluvar Nadagam, Vanathi Pathippakam, Chennai, India

Elango, S.S. (2017) Bharathidasan Drama's - A Study, New Century Book House, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License